# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## அலகுப்பரீட்சை - 1

**தரம் - 13 (2023)** | **கிறிஸ்தவம்**

### பகுதி - I

- **பின்வரும் வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01) திருச்சபையின் படிப்பினைகளுக்கு எதிரான யோதனைகள்
1) கொள்கைகள் 2) பேதகங்கள் 3) படிப்பினைகள்
4) திருமடல்கள் 5) சுற்று மடல்கள்

02) இருபத்தொராவதாக நடைபெற்ற பொதுச் சங்கம்
1) இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம்
2) நிசேயா பொதுச் சங்கம்
3) ஒரேஞ் பொதுச் சங்கம்
4) கல்செதோன் பொதுச் சங்கம்
5) எபேசு பொதுச் சங்கம்

03) நிசேயா பொதுச் சங்கத்தை ஒன்று கூட்ட பேரரசன் கொன்ஸ் ரன்ரைனுக்கு அங்கீகாரம் வழங்கியவர்.
1) திருத்தந்தை செலஸ்தீன் 2) திருத்தந்தை பெரிய சிங்கராயர்
3) திருத்தந்தை 10ஆம் பத்திநாதர் 4) திருத்தந்தை 23ஆம் அருளப்பர்
5) திருத்தந்தை 1ஆம் சில்வெஸ்டர்

04) அட்டிலா என்னும் ஹன்ஸ் கோத்திரத் தலைவனின் தாக்கங்களிலிருந்து உரோமையைப் பாதுகாத்துக் கொண்டவர்.
1) திருத்தந்தை IV ஆம் சிங்கராயர் 2) திருத்தந்தை II ஆம் சிங்கராயர்
3) திருத்தந்தை 1 ஆம் லியோ 4) திருத்தந்தை 7 ஆம் கிரகோரி
5) திருத்தந்தை 2 வது ஊத்பன்

05) பெலாஜிய கொள்கைக்கு எதிராக முன்வைத்த வாதம்
1) மனிதனின் இறை வாழ்வு பாவத்தின் மூலம் அனிந்தது.
2) மனிதன் பாவத்திலிருந்து மீள இறை உதவி தேவை
3) நல்ல வாழ்வு வாழ்வதன் மூலம் மீட்படைய முடியும்
4) சடங்குகள் மூலம் இறை வாழ்வினைப் பெற முடியும்
5) மீட்பை உரிமையாக்கி கொள்ள இறையருளும் மனித முயற்சியும் தேவை

06) பத்தாம் நூற்றாண்டில் திருச்சபையின் மறுமலர்ச்சிக்குப் பெரும் அளவில் பங்களிப்பு செய்தது
1) உள்ளூராட்சி அதிகாரம்
2) திருச்சபைத் தலைவர்களின் முயற்சி
3) ஆயர்களின் நல்வாழ்க்கை
4) பொது நிலையினர் திருச்சபைப் பதவிகளுக்கு நியமித்தமையாகும்
5) பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட துறவற வாழ்க்கை முறையாகும்

07) கீழைத்தேய மேலைத்தேய சபைபகளின் பிளவுகளுக்கு காரணம்

1) திருச்சபை தலைமைத்துவமும் இறை பேதகமுமாகும்.
2) சபைகளின் சம்பிரதாய முறைகள்
3) விசுவாசப் பிரமாணங்கள்
4) வெளகீக அரசியல்
5) திருச்சபை மக்களின் துன்புறுத்தல்

08) பெலாஜியின் தப்பறைக் கொள்கையை முற்றாக மறுத்த திருச்சபைத் தந்தை

1) புனித ஜெரோம் 2) புனித ஜஸ்டின் 3) புனித சிறில்
4) புனித அகுஸ்தின் 5) புனித கிளமென்ட்

09) செல்டிக் துறவற மடத்தை ஸ்கொட்லாந்தில் ஆரம்பித்ததால்

1) பிரித்தானிய தீவுகளில் அதிகமானோர் கிறிஸ்தவ மதத்தை மறுதலித்தனர்.
2) பிரித்தானிய மக்கள் வேறு தீவுகளில் குடியேறினர்.
3) பிரித்தானிய தீவுகளில் அதிகமானோர் கிறிஸ்தவ மதத்தை தழுவினர்.
4) சிறு குழுவினர் மட்டுமே கிறிஸ்தவ மதத்தை தழுவினர்.
5) பிரித்தானியாவில் புதுமையான செயல்கள் செய்யப்பட்டன.

10) பத்தாம் நூற்றாண்டில் துறவற சபையின் மத்தியில் பிரதான இடத்தைப் பெற்றது

1) பெனடிக் துறவற சபை 2) குளுனி துறவற சபை 3) கார்த்தூஷியன் துறவற சபை
4) கமல்டோலெஸ் துறவற சபை 5) சிஸ்ரேசியன் துறவற சபை

11) பத்தாம் நூற்றாண்டில் திருச்சபை ஆன்மீகத்தில் நலிவடைந்த காலப்பகுதியில் அதன் முன்னேற்றத்திற்காக இறையருளால் நியமணம் பெற்ற திருத்தந்தை

1) 23 ஆம் அருளப்பர் 2) 1 ஆம் கிறகோரி 3) 1 ஆம் சிங்கராயர்
4) 2 ஆம் சிங்கராயர் 5) 2 ஆம் சில்வெஸ்டர்

12) ஒன்பதாம் நூற்றாண்டில் மேற்கு திருச்சபையின் வீழ்ச்சிக்கு காரணமாய் அமைந்த விடயங்கள்

1) தகுதியற்ற உரோமைப் பிரபுக்களின் ஆட்சி
2) அரசின் நிலையற்ற தன்மை திருத்தந்தையர்களின் பலவீனம்
3) கல்வியறிவற்ற ஆட்சியாளர்கள்
4) பேரரசர்கள் திருச்சபையின் நிர்வாகத்தில் தலையிட்டமை
5) திருச்சபைக்கும் ஒத்தடொக்ஸ் சபைக்குமிடையிலான முரண்பாடுகள்

13) ஸ்லாவிக் கோத்திரமக்களின் மொழி கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான புதிய அரிச்சுவடியொன்றை அறிமுகப்படுத்தியவர்.

1) புனித ஜெறோம் 2) புனித அத்தனாசியார் 3) புனித ஜஸஸ்டின்
4) புனித சிறில் 5) புனித ஒரிஜன்

14) ‘இறைவனின் நகரம்’ எனும் நூலை எழுதியவர்

1) புனித அகுஸ்தினார் 2) திருத்தந்தை முதலாம்லியோ 3) புனித பெற்றிக்
4) திருத்தந்தை கிரகோரி 5) புனித பொனிபாஸ்

15) கிரகோரியாரின் சான்று எனும் பெயரில் கிறிஸ்தவ திருப்பலியில் புதிய இசை முறையை அறிமுகப்படுத்தியவர்

1) புனித பொனிபாஸ் 2) பெரிய சான்ஸ் அரசன் 3) திருத்தந்தை கிரகோரி
4) புனித பெனடிற் 5) திருத்தந்தை முதலாம் லியோ

16) ஜேர்மனியின் திருத்தூராக அழைக்கப்பட்டவர்

1) புனித கொலம்பா 2) புனித பெற்றிக் 3) புனித பெனடித்
4) புனித அகுஸ்தினார் 5) புனித பொனிபாஸ்

17) தத்தமது பேராலயத்திற்கு அருகில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்கும் படி எல்லா ஆயர்களுக்கும் கட்டளை இட்ட அரசன்

1) ஏரோது 2) பெரிய சான்ஸ் 3) முதலாம் ஓட்டோ
4) பேரரசன் தியோடோசியன் 5) 14 ஆம் லூயி

18) மரியா வேததாய் என ஏற்றுக் கொண்ட திருச்சங்கம்

1) கொன்ஸ்தாந்திநோபிள் 2) கல்செதோன் 3) நிசேயா
4) எயேசு 5) வத்திக்கான் சங்கம்

19) கிறிஸ்துவுக்குன் இறை சுபாவம் மட்டும் இருப்பதோடு மனித சுபாவம் ஓரளவு மட்டுமே உள்ளது என்ற கொள்கையைக் கொண்ட பேதகம்

1) அரிய பேதகம் 2) நெல்தோரிய பேதகம் 3) இயுத்திக்கேய பேதகம்
4) பெலாஜிய பேதகம் 5) முக்கியமற்ற பேதகம்

20) கி.பி 410 இல் உரோமையை அழித்து மேற்குப் பேரரசுக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்திய கோத்திரம்

1) விசிகோத் 2) வண்டல் 3) பத்குண்டியன்
4) பிராங்கர் 5) வைக்கின்ஸ்

(1x20 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**எல்லா வினாக்களிற்கும் விடையளிக்குக.**

1) 1. 4 ஆம் நூற்றாண்டில் கூட்டப்பட்ட இரண்டு பொதுச் சங்கங்களைத் தருக. (2 புள்ளிகள்)
2. திருச்சங்கங்களைக் கூட்டுவதற்கு திருத்தந்தையின் முக்கிய பணிகள் 2 தருக. (4 புள்ளிகள்)
3. பேதகங்களினால் திருச்சபைக்கு ஏற்பட்ட விளைவுகள் மூன்று தருக. (6 புள்ளிகள்)
4. நான்கு தப்பறையான போதனைகளையும் அவற்றின் முக்கிய படிப்பினைகளையும் விளக்குக. (8 புள்ளிகள்)

2) 1. நிசேயா பொதுச் சங்கத்தை கூட்டப்படுவதற்கு ஏதுவான காரணத்தை சுருக்கமாக முன்வைத்து அப்பொதுச் சங்கம் முன்வைத்த ஒழுங்குகள் கட்டங்கள் தொடர்பாக எடுத்த தீர்மானங்கள் 5 தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

2. இன்றைய இளைய சமூகத்தினர் இறை நம்பிக்கையில் வாழ்வதற்கு தடையாக அமைந்த காரணிகளை குறிப்பிட்டு அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் 5 தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

3) 1. ஆறாம் நூற்றாண்டில் பெனடிற் துறவற சபையினரின் பங்களிப்பினை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

2. துறவற சபைகளின் துறவிகளின் காட்சிய வாழ்வு இன்றைய திருச் சபை மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் 5 விடயங்களை முன்வைத்து விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

4) 1. குளுனி துறவற சபையின் சிறப்பம்சங்களை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

2. இலங்கையில் காணப்படும் சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த நீர் எவ்வாறு செயற்படுவீர் என்பதை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*